# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 16 செவ்வாய்க்கிழமை 29.04.2025 கதிர் 181







# காங்கேசன்துறை – பலாலி இடையிலான பஸ் சேவை 35 வருடங்களின் பின் ஆரம்பம்





யாழ்ப்பாணம், ஏப். 29

சுமார் 35 வருடங்களின் பின்னராகக் காங்கேசன்துறை - பலாலி இடையிலான அரச பஸ் சேவை இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யுத்தம் காரணமாக கடந்த 35 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட குறித்த பகுதியூடாகப் பொதுமக்கள் நடமாட முடியாத சூழல் காணப்பட்டது.

இதன் காரணமாக பயணிகள் யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வரை மாத்திரமே

7

# எங்களைப் பொம்மைகளாக பயன்படுத்த முனையாதீர்கள்

## அநுர அரசைக் கடுமையாக எச்சரிக்கின்றது வடக்கு தொழிற்சங்கங்களின் சம்மேளனம்




யாழ்ப்பாணம், ஏப். 29

"காலாகாலமாக ஆட்சிக்கு வரும் அரசுகள் தொழிற் சங்கங்களைத் தமது தேவைக்கேற்ப பயன்படுத்திய பின் தூக்கி வீசிவிடுவது வழமை. அதேபோன்றே அநுர தலைமையிலான அரசும் கடந்த கால அரசுகள் போலவே எம்மைத் தமக்கான பொம்மைகளாகப் பயன் படுத்த முனைகின்றது." - என்று வடக்கு மாகாண தொழிற் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

7

# ஜனாதிபதி மே 3 இல் வியட்நாம் பயணம்



கொழும்பு, ஏப். 29

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி வியட்நாமுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று அமைச்சர் நளிந்த

7

# கடந்த கால ஆட்சியாளர்கள் போல் அநுர அரசும் அரசியல் தலையீடு!

## இலங்கை ஆசிரியர் சங்கம் பகிரங்கக் குற்றச்சாட்டு




யாழ்ப்பாணம், ஏப். 29

அரசியல் தலையீடற்ற ஆட்சியை ஏற்படுத்துவோம் என ஆட்சி அதிகாரத்தை எடுத்துக்கொண்ட அநுர அரசும் கடந்த கால ஆட்சியாளர்கள் போன்றே அரசியல் தலையீடுகளைச் செய்கின்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் இலங்கை

7

# பாணந்துறையில் நேற்றிரவு ஒருவர் சுட்டுப் படுகொலை!





கொழும்பு, ஏப். 29

பாணந்துறை - ஹிரண பகுதியில் நேற்றிரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில்

7

# பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பிவைப்பு




கொழும்பு, ஏப். 29

நாடாளுமன்றத்தில் அணமையில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் சட்டவிரோதமான தடுப்பு முகாம்கள் மற்றும் சித்திரவதை முகாங்களை நிறுவுதல் மற்றும் நடத்திச் செல்லல் குறித்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலின்படி ஜனாதிபதி அலுவலகத்தால்

7

# அரச பேருந்து, தனியார் பேருந்து மோதி விபத்து– 30 பேர் காயம்!



கொழும்பு,ஏப்.29

அரச பேருந்து ஒன்றும் தனியார் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதி ஏற்பட்ட விபத்தில் 30 பேர் காயமடைந்து பெலியத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து பெலியத்த பொலிஸ்பிரிவுக்குற்பட்ட ஹெட்டியாராச்சி வளைவில் இன்று (29) காலை இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நீதிபதிக்கு எதிராக அவதூறு பரப்பிய 06 சமூக வலைத்தள கணக்குகள் குறித்து சி.ஐ.டி விசாரணை!

கொழும்பு,ஏப்.29

சமூக வலைத்தளத்தில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக அவதூறு பரப்பிய ஆறு சமூக வலைத்தள கணக்குகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன், தனக்கு அவதூறு விளைவிக்கும்வகையில்பொய்யான தகவல்களைப் பரப்பிய ஆறு சமூக ஊடக கணக்குகள் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடொன்றை அளித்துள்ளார். குறித்த சமூக வலைத்தள கணக்கில், ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் பிள்ளையானுக்கு பிணை வழங்கியமை உள்ளிட்ட பல்வேறு போலியான தகவல்கள் மற்றும் தனது தனிப்பட்ட தகவல்களை உள்ளடக்கி அவதூறு விளைவிக்கப்படுவதாக நீதிபதி சசி மகேந்திரன் அளிக்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, குறித்த ஆறு சமூக ஊடக கணக்குகள் தொடர்பாக தகவல்களைப் பெறுவதற்கு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இணைய கண்காணிப்பு மற்றும் புலனாய்வு பிரிவுக்கு கொழும்பு பிரதான நீதவான் தனூஜா லக்மாலி அனுமதி வழங்கியுள்ளார்.

அதன்படிசமூகவலைத்தளத்தில்மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரனுக்கு எதிராக அவதூறு பரப்பிய ஆறு சமூக வலைத்தள கணக்குகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவு இன்றுடன் நிறைவு!

கொழும்பு,ஏப்.29

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்குப்பதிவு இன்றுடன் (29) நிறைவடைகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு கடந்த 24ஆம் திகதி ஆரம்பமான நிலையில் 25, 28, மற்றும் 29ஆம் திகதிகளிலும் தபால் மூல வாக்குப்பதிவு மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி இன்று தபால்மூல வாக்கு பதிவுக்கான இறுதி நாளாகும்.

இதுவரையில்தபால்மூலம்வாக்களிக்க முடியாத அரச ஊழியர்கள் இன்று தங்கள் பணியிடங்களில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகம் இதுவரையில் சுமார் 90 சதவீதம் விநியோகிக்கப்பட்டுள்ளநிலையில், இன்றுடன் அது நிறைவடைய உள்ளதாக தபால் மா அதிபர் ருவன் சத்குமார தெரிவித்தார்.

# வீடொன்றில் இருந்து உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட சடலம்!

*கொழும்பு,ஏப்.29*

*கெஸ்பேவ பகுதியில் உள்ள வீட்டொன்றில் இருந்து உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.*

*கெஸ்பேவ, மடபாத்த, மாகந்தன, பட்டுவந்தர பகுதிகளில் உள்ள வீட்டொன்றில் இருந்து சுமார் 8 மாதங்களுக்கு முன்பு உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் ஒருவரின் சடலம் நேற்று இரவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.*

*சடலம் கண்டுபிடிக்கப்பட்ட போது உடல் மிகவும் சிதைந்து அடையாளம் காண முடியாத அளவுக்கு இருந்ததாக பொலிஸார் தெரிவித்ததுடன், உயிரிழந்தவர் பெண்ணாக இருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.*

*சம்பவ இடத்தில உள்ள நீதவான் விசாரணை இன்று (29) இடம்பெறவுள்ளது.*

*இது குறித்த மேலதிக விசாரணைகளை கெஸ்பேவ பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*



# யாழ்.பல்கலைக்கழக பொன் விழா நிகழ்வு






யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட த்தின் பொன்விழா நிகழ்வு திங்கட்கிழமை) அன்று மிக சிறப்பாக இடம்பெற்றது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் திங்கட்கிழமைகாலை இடம்பெற்ற பொன் விழாநிகழ்வில் கலைப்பீட வரலாற்றை வெளிப்படுத்தும் நூலொன்று வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்கள்,பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள் எனபலரும்கலந்து கொண்டனர்.

இதன்னொரு அங்கமாக பல்கலைக்கழக கலைப்பீட வரலாற்றை வெளிப்படுத்தும் புகைப்படக் கண்காட்சியும் நடைபெற்றது. (ஐ)




# இலங்கை மாணவர்களுக்கு சிங்கப்பூரில் சந்தர்ப்பம்

கொழும்பு,ஏப்.29

இலங்கை பட்டதாரி மாணவர்களுக்கு பட்டப்பின் படிப்பிற்கான புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் உள்ளிட்ட உயர்கல்விக்கான ஒத்துழைப்புக்களை உருவாக்குவதற்காக, உலகளாவிய ரீதியில் தரப்படுத்தப்பட்ட பல்கழைக்கழகங்களில் முதல்நிலையை வகிக்கின்ற சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் **(National University of Singapore) (NUS)** மற்றும் இலங்கையின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதன் மூலம், இலங்கை மாணவர்களுக்கு சிங்கப்பூரின் தேசிய பல்கழைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் உள்ளிட்ட பட்டப்பின் படிப்புக்களை மேற்கொள்வதற்கும் இயலளவு விருத்தி நிகழ்ச்சி திட்டங்களில் பங்கெடுப்பதற்கும் ஒருங்கிணைந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் வாய்ப்புக்கள் கிடைக்கும் .

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கல்வி,உயர்கல்வி, மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து ஒருவர் பலி



கொழும்பு,ஏப்.29

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில்கஹதுடுவ மற்றும் கொட்டாவைக்கு இடையே 5.4 கி.மீ தொலைவில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், மூன்று பேர் காயமடைந துள்ளதாகவும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் , இரண்டு பிள்ளைகளின் தந்தையான 41 வயதுடைய தசநாயக்க அலுத்கே அமில என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் விபத்துக்குள்ளான கார் ஒன்றை லொறியில் ஏற்றிக்கொண்டு, அதிவேக நெடுஞ்சாலையில் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, கஹதுடுவ மற்றும் கொட்டாவைக்கு இடையில் வைத்து லொறியின் முன்பக்க சக்கரம் சேதமடைந்துள்ளது.

இந்நிலையில் அவர் தனது நண்பருக்கு தொலைபேசியில் அழைத்து தேவையான உதிரி பாகங்களை கொண்டு வரச் சொன்னதையடுத்து , உதிரி பாகங்களுடன் காரில் அந்த இடத்திற்கு சென்ற நண்பன் லொறியின் முன்பக்கத்திலிருந்து சிறிது தூரத்தில் காரை நிறுத்தி, லொறியின் ஓட்டுநர் முன் சக்கரத்தை பழுது பார்த்துக் கொண்டிருந்த போது, லொறியின் இடதுபுறத்தில் உள்ள அதிவேக நெடுஞ்சாலையின் பாதுகாப்பு வேலியில் அமர்ந்திருந்திருந்துள்ளார்.

அந்த நேரத்தில், மாத்தறையில் இருந்து வந்த ஒரு கார், லொறியின் முன் சக்கரத்தை பழுது பார்த்துக் கொண்டிருந்த ஓட்டுநர் மீது மோதி அவரை தள்ளிக்கொண்டு, முன்னால் நிறுத்தப்பட்டிருந்த காரின் பின்புறத்தில் மோதி இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் லொறியின் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் விபத்தை ஏற்படுத்திய மோட்டார் வாகனத்தின் ஓட்டுநர், அவரது மனைவி மற்றும் மகள் காயமடைந்து ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதிவேக போக்குவரத்து பிரிவின்பொறுப்பதிகாரி, தலைமைப் பரிசோதகர் சம்பத் பெரேராவின் அறிவுறுத்தலின்பேரில், பொறுப்பதிகாரி, தலைமைப் பரிசோதகர் அசோக கருணாதிலக்க ,பொலிஸ் சார்ஜென்ட்14612 சம்பத் மற்றும் 13516 ரத்னசிறி ஆகியோர் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# தேர்தல் குறித்து விழிப்புணர்வு




எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான முறைப்பாடுகளை தீர்ப்பது குறித்து உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று திங்கட்கிழமை (28) அன்று திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வு செயலமர்வானது தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தற்போதைய உள்ளூராட்சி முறைமையின் தனித்துவமான அம்சங்கள் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விளக்கமளித்தார்.

இதன்போது பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய அவர்கள் நிகழ்நிலை மூலம் இணைந்து உரையாற்றினார். தேர்தல்களின் போது பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்புகள் குறித்து சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தினேஷ் கருணாநாயக்க மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் சட்ட பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர அவர்களால் தேர்தல் சட்டத்தின் சட்ட விதிகள் குறித்து விரிவுரைகளை வழங்கினர். தேர்தல் சட்டம், தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ மையம் மற்றும் காவல்துறையின் பொறுப்பு, தேர்தல் செலவின ஒழுங்குமுறை, பிரச்சார அலுவலகங்கள் மற்றும் பிரச்சார கட்டுப்பாடுகள் குறித்த தகவல்களைமேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம், விசாரணை மற்றும் திட்டங்கள்) பி. பீ. சி. குலரத்ன அவர்களால் தெளிவூட்டப்பட்டன.

மேலும், பொலிஸ் அதிகாரிகளின் தேர்தல் கடமைகள் குறித்த விரிவுரையானது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க அவர்களால் நடாத்தப்பட்டது. இதன்போது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார, திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். சுதாகரன், திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். கே.டி. நெரஞ்சன், பொலன்னறுவை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் மற்றும் பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (ஐ)

# சட்டவிரோதமாக இருந்த 6500 பேர் ஆக்கிரமித்து கட்டிய வீடுகள் இடிப்பு



குஜராத்தில் உரிய ஆவணங்கள் இன்றி குடியிருந்த 6,500 பேரை கண்டறிந்த போலீசார் அவர்களிடம்விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் சுமார் 450 பேர் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தது உறுதியானதால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும், சந்தோலா ஏரி பகுதியில் அவர்கள் ஆக்கிரமித்து கட்டியிருந்த வீடுகளையும் நகராட்சி நிர்வாகம் இடித்து தள்ளியது.

கடந்த மாதம் டில்லி போதை பொருள் தடுப்பு பிரிவு போலீசார், அதே பகுதியை சேர்ந்த சந்த் மியா, என்பவரை கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் வங்கதேச நாட்டை சேர்ந்தவர்கள், விசா உள்ளிட்ட எந்தவித ஆவணங்களும் இல்லாமல் சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்து, பல்வேறு பகுதிகளில் பதுங்கி இருப்பதாக வாக்குமூலம் அளித்தார். இதையடுத்து டில்லி போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார், நேற்று தமிழகத்தில் நடத்திய சோதனையில் சென்னையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 33 பேரை கைது செய்தனர்.

இந்த நிலையில் குஜராத் மாநிமல் ஆமதாபாத் மற்றும் சூரத்தில் போலீசார் நடத்திய சோதனை நடவடிக்கையில் உரிய ஆவணங்கள் இன்றி குடியிருந்த வங்கதேசத்தினரிடம் விசாரணை நடத்தினர். இது குறித்து போலீஸ் டிஜிபி விகாஸ் சஹாய் கூறுகையில், "ஆமதாபாத், சூரத்தில் நடந்த தேடுதல்நடவடிக்கையில்சந்தேகத்தின்அடிப்படையில் 6500 வங்கதேச மக்களிடம் விசாரணை நடத்தினோம். அதில் 450 பேர் சட்டவிரோதமாக குடியேறியது தெரியவந்துள்ளது. அவர்களை கைது செய்துள்ளோம். மீதமுள்ளவர்களிடமும் விசாரணை நடக்கிறது" என்றார்.

அங்குள்ள அம்தாவாட் நகராட்சிக்கு உட்பட்ட சந்தோலா ஏரி பகுதியில் ஆக்கிரமித்து குடியேறியிருந்த இவர்களின் வீடுகளை நகராட்சி நிர்வாகமும் இடித்து தள்ளியது. கைது செய்யப்பட்ட வங்கதேசத்தினரை நாடு கடத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தி.மு.க., பீர் விருந்து இ.பி.எஸ்., விமர்சனம்



"மக்கள் வரும் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் பெரிய 'ஓ' (O) வாக போட்டு பை பை ஸ்டாலின் சொல்லிடுவார்கள்" என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., கூறியுள்ளார்.

கள்ளச்சாராய ஆட்சிக்கு! கள்ளக்குறிச்சியே சாட்சி! சட்டம் ஒழுங்கு சீர்கேட்டிற்கு மாணவர்கள் புத்தகப் பையில் அரிவாள்களே சாட்சி! பெண்கள் பாதுகாப்பின்மைக்கு அண்ணா பல்கலைக்கழகமே சாட்சி! போதைப் பொருள் கடத்தலுக்கு தி.மு.க., அயலக அணியே சாட்சி!

அ.தி.மு.க., ஆட்சியில் தலை நிமிர்ந்து இருந்த தமிழகத்தை, ஜாமினில் வந்த வர்க்கெல்லாம் தியாகி பட்டம் கொடுத்து தலைகுனிய வைத்ததற்கு பொம்மை முதல்வரே சாட்சி! 2026-ல் ஒரே **version** தான்.

அது அ.தி.மு.க., **version** தான்! மக்கள் வரும் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் பெரிய 'ஓ' (O) வாக போட்டு பை பை ஸ்டாலின் என்று சொல்லும்போது தாங்கள் சட்டையை கிழித்துக்கொண்டு தவழ்ந்து செல்லாமல் இருந்தால் சரி. இவ்வாறு இ.பி.எஸ்., கூறியுள்ளார். (ஐ)



## அடங்காமல் ஆடும் பாகிஸ்தான் ராணுவம் 5வது நாளாக எல்லையில் அத்துமீறல் இந்திய ராணுவம் பதிலடி

தொடர்ந்து 5வது நாளாக ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தான் ராணுவம் எல்லை தாண்டி துப்பாக்கிச்சூடு நடத்தி உள்ளது, பதற்றத்தை அதிகரித்துள்ளது. இந்திய ராணுவமும் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தான், இந்தியா இடையே பதற்றம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஜம்முகாஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் பாதுகாப்பு படையினர் களம் இறங்கி உள்ளனர்.

சந்தேக நபர்கள், இடங்களில் பாதுகாப்பு பிரிவினர் அதிரடியாக சோதனை நடத்தி வருகின்றனர். குப்வாரா, பாரமுல்லா மாவட்டங்களிலும், அக்னூர் செக்டாரிலும் பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந் நிலையில், 5வது நாளாக ஜம்மு காஷ்மீரில் சர்வதேச எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டை தாண்டி பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தி இருக்கிறது.

சிறிய ரக துப்பாக்கியால் சுட்டு பாகிஸ்தான் நடத்திய தாக்குதலை தொடர்ந்து, இந்தியாவும்பதிலடி கொடுத்துள்ளது. பாகிஸ்தான் ராணுவத்தின் தாக்குதலை எதிர்கொண்டு பதில் தாக்குதல் நடத்தியதாக இந்திய ராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இருப்பினும், எல்லைக்கட்டுப்பாட்டு பகுதியில் பதற்றம் நீடிப்பதால் கண்காணிப்பை இந்திய ராணுவம் தீவிரப்படுத்தி இருக்கிறது. (ஐ)

## மதுரை சித்திரை திருவிழா கொடியேற்றத்துடன் துவக்கம்

மதுரை மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா கொடியேற்றத்துடன் (ஏப்.,29) துவங்கியது. காலை 10.35 மணி முதல் 10.59 மணிக்குள் சுவாமி சன்னதி முன் கொடியேற்றம் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

திருவிழா நாட்களில் தினமும் அம்மனும், சுவாமியும் பல்வேறு வாகனங்களில் காலை, மாலை வீதி உலா வருகிறார்கள். மே 6 முதல் முக்கிய நிகழ்வாக அம்மன் பட்டாபிஷேகம் இரவு 7:35 மணி முதல் 7:59 மணிக்குள் நடக்கிறது. மே 7 திக்குவிஜயத்தை தொடர்ந்து மே 8 காலை 8:35 மணி முதல் 8:59 மணிக்குள் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் நடக்கிறது. மே 9 மாசி வீதிகளில் தேரோட்டம் நடக்கிறது. மே 10 தீர்த்தவாரி உற்ஸவத்துடன் மீனாட்சி அம்மன் கோயில் நிகழ்வுகள் நிறைவுபெறுகின்றன. இதன் தொடர்ச்சியாக மே 11 கள்ளழகர் எதிர்சேவை, மே 12ல் ஆற்றில் சுவாமி இறங்குதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடக்கின்றன.


திருக்கல்யாணத்திற்கு முன்பதிவு மே 8 ல் நடக்கும் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணத்தை காண அறநிலையத்துறையின் ாசஉந.வெ.பழள.ை இணையதளத்திலும், கோயில் இணையதளத்திலும் அயனரசயைஅநநயெமளாை.ாசஉந.வெ.பழள.ை இன்று (ஏப்.,29) முதல் மே 2 இரவு 9:00 மணி வரை ரூ.500, ரூ.200 கட்டண சீட்டு பெறமுன்பதிவு செய்யலாம். ரூ.500 கட்டணச்சீட்டு பதிவில் ஒருவர் இரண்டு டிக்கெட் மட்டுமே பதிவு செய்ய முடியும்.ரூ.200 கட்டணச்சீட்டு பதிவில் ஒருவர் மூன்று டிக்கெட் மட்டுமே பதிவு செய்ய முடியும். ஒரே நபர் ரூ.500, ரூ.200 கட்டண சீட்டை பதிவு செய்ய முடியாது.

மே 3க்குள் தகவல் தெரிவிப்பு ஆதார் கார்டு, போட்டோ அடையாள சான்று, அலைபேசி, இ-மெயில் முகவரியுடன் முன்பதிவு செய்ய வேண்டும். கணினி மூலம் குலுக்கல் முறையில் விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டு மே 3க்குள் தகவல் தெரிவிக்கப்படும். தகவல் கிடைக்கப் பெற்றவர்கள் மே 4 முதல் 6 வரை காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரைமேலசித்திரை வீதியில் உள்ளபிர்லா விஷ்ரம் தங்கும் விடுதி மையத்தில் தங்களுக்கு வந்த தகவலை காண்பித்து பணம் செலுத்தி கட்டணச்சீட்டினை பெற்றுக் கொள்ளலாம். திருக்கல்யாணத்தன்று அதிகாலை 5:00 மணி முதல் 7:00 மணி வரை மட்டுமே கோயிலுக்குள் பக்தர்கள் அனுமதிக்கப்படுவர். ரூ.500 கட்டண சீட்டு உள்ளவர்கள் வடக்கு கோபுரம் வழியிலும், ரூ.200 கட்டணச்சீட்டு உள்ளவர்கள் வடக்கு - கிழக்கு சித்திரை வீதி சந்திப்பு அருகே உள்ள பாதை வழியாக வந்து வடக்கு கோபுரம் வழியாகவும் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள். (ஐ)



# உணர்வு சூழ் உலகம்!

உணர்வு சார் நுண்ணறிவு என்பது, ‘உணர்வுகளை உணரும் ஆற்றல், சிந்தனையை ஊக்குவிக்கும் வண்ணம் உணர்வை ஒருங்கிணைத்தல், உணர்வுகளைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் தனிப்பட்ட நபரின் வளர்ச்சியை முன்னேற்றும் வகையில் அவற்றைச் சீரமைப்பது.’




இதைப் பற்றி ஆரம்பக் காலத்தில் நிறைய ஆராய்ச்சியாளர்கள் பேசி இருந்தாலும் நுஞ வை பிரபலபடுத்தயது டேனியல் கோல்மேன் எழுதிய **‘Emotional intelligence why it can matter more than IQ’** என்கிற புத்தகம்தான். இன்று நுஞ பற்றி எழுதும் ஃ பேசும் எவரும் இவர் வழிகாட்டுதலை மேற்கோள் காட்டாமல் இருக்க முடியாது.

நான் மிகச்சிறந்த அறிவாளி, மிக நல்ல வேளையில் இருக்கிறேன் ஃ வெற்றிகரமான வியாபாரத்தை நடத்துகிறேன், எனக்கு இந்த நுஞ எல்லாம் தெரியாது, எதற்குத் தெரிய வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்.

வாழ்க்கையின் உயரத்திற்கு நுஞ வைப் பற்றித் தெரியாமலே செல்வது வேண்டுமானால் சாத்தியப்படலாம். ஆனால், அதைத் தக்க வைத்துக்கொள்ள, அனுபவிக்க, நிறைவான வாழ்க்கை வாழ நுஞ மிகவும் இன்றியமையாதது. இப்போதெல்லாம் தலைமைப் பண்பு தேவைப்படும் வேலைகளுக்கும் EQ ஓர் அவசிய பண்பாகப் பார்க்கப்படுகிறது.

மிகவும் வெற்றிகரமான, வசதிக்குக் குறைச்சல் இல்லாத நடிகைகள் பலர் அவர்கள் தொழில் உச்சத்தில் இருந்த போதே வாழ்வை முடித்துக் கொண்ட சோகத்தை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். சராசரி மனிதனின் கவலைகள் ஏதுமில்லாத, நினைத்த வாழ்க்கையை வாழ வசதி இருந்தவர்கள் வாழ்வை முடித்துக்கொள்ள நினைத்தது ஏன்?

மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து ஐஐவு போன்ற பெரிய கல்வி நிறுவனங்களில் இடம் கிடைத்தும் சில சூழல்களால் தற்கொலையைத் தேடிக்கொண்ட குழந்தைகளைப் பற்றிப் படிக்கிறோம். நிச்சயமாக அவர்களின் அறிவு சராசரிக்கும் உயர்ந்தது, கடின முயற்சி இல்லாவிடில் அவர்கள் அந்தக் கல்வி நிறுவனத்தில் இடம்பிடித்திருக்க முடியாது. ஆனாலும் ஏன் இந்த முடிவு ?

எத்தனையோ குழந்தைகள் 10 ஃ 12 தேர்வு முடிவுகள் வரும்போது தோற்றுவிடுவோம் என்கிற பயத்திலோ தோற்றுவிட்டாலோ வீட்டை விட்டு வெளியேறுவதையும் அல்லது தவறான முடிவைத் தேடிக்கொள்வதையும் ஒவ்வொரு வருடமும் பார்க்கிறோம்.

கேரளாவில் ஒரு மருத்துவர் வரதட்சணை கொடுமையால் தற்கொலை செய்து கொண்டபோது, ஒரு மருத்துவர் ஏன் இது போன்ற முடிவெடுத்தார் என நம்மில் பலருக்கு அதிர்ச்சி.

சமீபத்தில் பெங்களூருவைச் சேர்ந்த ஒரு பெண் சிஇஓ தனது 4 வயது குழந்தையைக் கொன்ற குற்றத்திற்காக கோவாவில் கைது செய்யப்பட்டார். நினைத்தாலே பதற வைக்கும் செயலைச் செய்தவருக்கு எந்த அளவு மன அழுத்தம் இருந்திருக்கும் என ஊகிக்க முடிகிறது.

ஆனால், இதெல்லாம் கண நேர உணர்வின் உச்சத்தில் எடுக்கும் முடிவுகள், அந்தக் கணத்தைத் தாண்டிவிட்டால் இந்த எண்ணத்தின் தாக்கம் குறையும்.

கோபத்தில் மனைவியை அடித்துக் கொன்ற கணவர் என்று செய்தி பார்க்கிறோம். இதற்கெல்லாம் அந்த நேரத்து உணர்வின் உச்சத்தைக் கையாள முடியாமல் போவதே காரணம். தத்துவ மேதை அரிஸ்டாட்டிலின் கூற்றுபடி, ’யார் வேண்டுமானாலும் கோபப்படலாம், அது மிக சுலபம். ஆனால், சரியான நபரிடம், சரியான நேரத்தில், சரியான காரணத்திற்காகச் சரியாக அதை வெளிப்படுத்துவது கடினம்.’

இதை நாம் தினசரி வாழ்வில் உணர்ந்திருப்போம். பல நேரம் கோபத்தின் உச்சியில் வார்த்தைகளைக் கொட்டிவிட்டுப் பின் அப்படிப் பேசாமல் இருந்திருக்கலாமோ எனப் பல முறை மறுகியிருப்போம்.

சிறிய வயதில் படித்த ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

தந்தையின் புதிய காரில் ஏதோ கிறுக்கிய சிறுவனை, தந்தை கோப மிகுதியால் தண்டிக்க அவனுக்கு விரல்கள் உடைந்துவிட்டன. கோபம் குறைந்த பின் குற்ற உணர்ச்சியில் தத்தளித்த தந்தை, சிறுவன் என்ன கிறுக்கினான் எனக் காணச் சென்றார். ‘றுழசடன’ள டிநளவ கயவாநச’ எனக் கிறுக்கி இருந்தான். அவர் குற்ற உணர்ச்சி வாழ்நாள் முழுக்க நீடித்திருக்கும் எனச் சொல்லவே தேவையில்லை. அந்த ஒரு நிமிடம் நிதானித்திருக்கலாம்.



கோபம் மட்டுமல்ல ஒவ்வோர் உணர்வுமே சரியான விதத்தில் வெளிப்படும்போதுதான் வேண்டிய பலனைத் தரும். இல்லையெனில் நாம் இந்தச் சமுதாயத்தில் இருந்து விலகி நிற்போம் அல்லது சமுதாயம் நம்மை விலக்கிவிடும்.

ஒரு சமூக அநீதியைக் காணும் அரசன், தீர்வு காண முயல்கிறான். கவிஞன், அந்தக் கோபத்தைக் கவிதையாக வெளிபடுத்துகிறான். ஓவியன், ஓவியமாக. எழுத்தாளர் தன் எண்ணத்தை எழுத்தில் பதிவு செய்கிறார். இதுவும் கோபத்தை வெளிபடுத்தும் முறைதான், இதனாலும் நிச்சயம் சமூக மாற்றம் வரும். ஆனால், இவையெல்லாம் ஆரோக்கியமான முறை.

எந்த உணர்வும் அது மகிழ்ச்சி, துக்கம், கோபம், பயம் எதுவாகினும் அதன் அளவு கூடும்போது அது நமது நடவடிக்கைகளைப் பாதிக்கிறது. அப்போது நாம் அதை வெளிப்படுத்தும் வழி பின்னாளில் நம்மை வருந்த வைக்கலாம் அல்லது மாற்ற முடியாத இழப்பை உண்டு பண்ணலாம். அந்தந்த நேரத்து உணர்வைச் சரியாகக் கையாள்வதின் மூலம் இதைத் தவிர்க்க முடியும்.

காதலன் திரைப்படத்தில் நாயகனுக்கு அவரின் அப்பா ஓர் அறிவுரை கூறுவார். மகிழ்ச்சியோ துக்கமோ கோபமோ உள்ளுக்குள் தோன்றும்போது ஒரு 1 நிமிடம் அமைதியாக இருந்து பின்னர் வெளிபடுத்துவது நல்லது.

இதுதான் நுஞ வில் பாலபாடம் எனலாம். எல்லா உணர்வுகளும் ஒரு விருந்தாளி போலதான், வருவதைப் போலவே போகவும் செய்யும். இடைப்பட்ட நேரத்தில் எந்தச் சேதாரமும் நடவாமல் இருக்க நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான், அந்திநயமிழவை கடக்கும் வரை அமைதியாக இருப்பது.

கோபம், துக்கம் சரி, மகிழ்ச்சி கூடவா என நீங்கள் கேட்பது புரிகிறது. ஆம் மகிழ்ச்சியும் அளவு மீறும் போது ஆபத்தானதே. நிறைய இதிகாசங்களில் அரக்கர்கள் அசுர தவம் செய்து இறைவனை மகிழ்விப்பர். அவரும் மகிழ்ந்து வேண்டிய வரம் தருவதாக வாக்களித்துப் பின் சிக்கலில் மாட்டிக்கொள்வர். அவர் கடவுள் தானே வரம் குடுத்தால் பின்னால் பிரச்னை வரலாம் என்று அவருக்குத் தெரியாதா என உங்களுக்குத் தோன்றலாம், நானும் அப்படித்தான் முதலில் நினைத்தேன்.

ஆனால், இது உண்மையில் நடந்ததா, இல்லையா என்று யோசிப்பதைவிட அது தரும் பாடத்தை மனதில் ஏற்றிக்கொள்ளலாம். கடவுளே ஆனாலும் மிகவும் மகிழ்ந்திருக்கும்போது யாருக்கும் வரமளிக்காதது நலம். பின் சாதரண மனிதர்களான நாம்?


பயமும் ஒரு தீவிர உணர்வு. பய உணர்வு மேலோங்கும் போது பதற்றத்தில் அறிவு வேலை செய்வதில்லை. அந்த ஆபத்தில் இருந்த தப்ப வேண்டுமென உடலில் உள்ள சக்தி முழுக்க உதவிக்கு வந்தாலும் மூளை செயல்படாவிடில் தப்புவது கடினம்.

கிராமத்தில் நிறைய பாம்புக்கடி மரணங்களைக் கேள்விப்பட்டு இருப்போம். அதில் பல நிஜமான பாம்பு கடித்திருக்காது. வேறு பூச்சியோ முள்ளோ காயப்படுத்தி இருந்தாலும் அது பாம்பு கடித்தது என எண்ணும் போதே நம் உடலில் அந்த ரசாயனங்கள் சுரந்து மரணம் நிகழ்கிறது. நிஜமான பாம்புக்கடிக்குக்கூடக் குறிப்பிட்ட கால கெடுவிற்கு முன்னதாக மருந்து கொடுத்து விட்டால் பிழைக்கலாம். ஆனால், பயம் தரும் விளைவு அதிகம்.

அதேபோல நன்றி உணர்வும் ஒரு தீவிர உணர்வு.

ராமாயணத்தில் கைகேயி போரில் வெற்றி பெற உதவியதற்கு, தசரதன் பொன்னும் பொருளும் தந்திருக்கலாம் நாட்டின் சிறு பகுதியைக்கூடத் தந்திருக்கலாம். ஆனால், எப்போதும் நஓிசைல ஆகாத இரண்டு வரம், அதுவும் என்னவென்றே தெரியாமல் அதை நிறைவேற்றுவதாக வரமளித்ததுதான் பின்னாளில் தசரதனின் உயிரைக் குடித்தது. இது அத்தனையும் நமக்குச் சொல்லும் பாடம் ஒன்றுதான், உணர்ச்சி மிகும்போது அதை அமைதியாகக் கடப்பதும் அதை நம் நன்மைக்குப் பயன்படுத்துவதும்தான்.

EQ என்பது உணர்வைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல, நாம் ஒரு விஷயத்தைப் பார்க்கும் முறையையே மாற்றுவது. அதன் பல படிகளில் ஒரு படிதான் கட்டுக்கடங்காத உணர்வுகளால் வரும் பின்விளைவுகளைத் தெரிந்துகொண்டு எச்சரிக்கையாக இருப்பது.




Emotional intelligence| EQ

தந்தையின் புதிய காரில் ஏதோ கிறுக்கிய சிறுவனை, தந்தை கோப மிகுதியால் தண்டிக்க அவனுக்கு விரல்கள் உடைந்துவிட்டன. கோபம் குறைந்த பின் குற்ற உணர்ச்சியில் தத்தளித்த தந்தை, சிறுவன் என்ன கிறுக்கினான் எனக் காணச் சென்றார்.‘றுழசடன‘ள டிநளவ கயவாநச’ எனக் கிறுக்கி இருந்தான். அவர் குற்ற உணர்ச்சி வாழ்நாள் முழுக்க நீடித்திருக்கும் எனச் சொல்லவே தேவையில்லை. அந்த ஒரு நிமிடம் நிதானித்திருக்கலாம். கோபம் மட்டுமல்ல ஒவ்வோர் உணர்வுமே சரியான விதத்தில் வெளிப்படும்போதுதான் வேண்டிய பலனைத் தரும். இல்லையெனில் நாம் இந்தச் சமுதாயத்தில் இருந்து விலகி நிற்போம் அல்லது சமுதாயம் நம்மை விலக்கிவிடும்.



# கனடா பார்லி தேர்தல் காலிஸ்தான் ஆதரவு கட்சி தலைவர் படுதோல்வி!

கனடா பார்லிமென்ட் தேர்தலில் காலிஸ்தான் ஆதரவாளர் என அறியப்படுபவரும், என்.டி.பி., கட்சித் தலைவருமான ஜக்மீத் சிங் படுதோல்வி அடைந்தார்.

கனடாவில் பார்லியின் பதவிக்காலம் வரும் அக்டோபர் மாதம் வரை இருக்கும் நிலையில், பிரதமர் மார்க் கார்னி பார்லியை கலைத்தார். தேர்தலை முன்கூட்டியே நடத்த அழைப்பும் விடுத்திருந்தார்.

அதன்படி, நேற்று பார்லி தேர்தல் நடந்து முடிந்து தற்போது முடிவுகளும் வெளியாகி இருக்கின்றன. இதில் பெரும்பான்மை இடங்களை ஆளும் லிபரல் கட்சி வென்று ஆட்சியை கைப்பற்றி உள்ளது. இதையடுத்து, அக்கட்சி உறுப்பினர்கள் சேர்ந்து பிரதமரை தேர்வு செய்ய உள்ளனர்.

இந்த தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட என்டிபி எனப்படும் புதிய ஜனநாயக கட்சி படுதோல்வியை சந்தித்துள்ளது. அக்கட்சியின் தலைவரும், காலிஸ்தான் ஆதரவாளராக அறியப்படுபவருமான ஜக்மீத் சிங் தோல்வி அடைந்துள்ளார். இதையடுத்து, கட்சித் தலைவர் பொறுப்பில் இருந்து ராஜினாமா செய்வதாகவும் அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள பர்னாபி சென்ட்ரல் தொகுதியில் ஜக்மீத் சிங் (கடந்த முறை இதே தொகுதியில் வென்றார்) போட்டியிட்டார். இதில் அவர் லிபரல் கட்சி வேட்பாளர் வாட் சாங் என்பவரிடம் தோல்வி அடைந்தார். ஓட்டு எண்ணிக்கையின் முடிவில் ஜக்மீத் சிங் 21 சதவீதம் ஓட்டுக்களை மட்டுமே பெற்றார். எதிர் வேட்பாளரான வாட் சாங் 41 சதவீதத்துக்கும் அதிகமான ஓட்டுகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

கனடாவில் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுகிறது லிபரல் கட்சி!

ஜக்மீத் சிங், கடந்த முறை ட்ரூடோ அரசுக்கு ஆதரவாக இருந்தவர். பார்லி.யில் ட்ரூடோ கொண்டு வரும் எந்த மசோதாவுக்கும் இவரது கட்சியே பெரும் ஆதரவளித்து வந்தது. பிற்காலத்தில் ட்ரூடோவுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு கூட்டணியில் இருந்து விலகிக்கொண்டார்.

இந்த தேர்தலில் ஜக்மீத் சிங் தோற்ற நிலையில், அவரது கட்சிக்கும் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. கட்சிக்கு தேசிய அங்கீகாரம் பெற வேண்டுமானால் குறைந்தது 12 தொகுதிகளிலாவது வென்றிருக்க வேண்டும். ஆனால் அவரின் என்.டி.பி., கட்சி படுதோல்வி அடைந்துள்ளதால் கட்சியின் தேசிய அங்கீகாரமும் பறிபோகும் நிலைமை எழுந்துள்ளது.

போட்டியிட்ட தொகுதியில் தோல்வி, கட்சியின் அங்கீகாரமும் பறிபோகும் நெருக்கடி என்ற நிலையில் தமது கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்வதாக ஜக்மீத் சிங் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

தேர்தல் முடிவு குறித்து அவர் தமது சமூகவலை தள பதிவில் கூறி உள்ளதாவது

புதிய ஜனநாயக கட்சியினர் இந்த நாட்டை கட்டி எழுப்பினர். நாங்கள் எங்கும் செல்ல போவதில்லை. தேர்தலில் அதிக இடங்களை வெல்ல முடியாதது எனக்கு ஏமாற்றமே.

கட்சிக்காக நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன். பயத்தை விட நம்பிக்கையை நாங்கள் தேர்ந்தெடுப்போம். பிரதமர் கார்னி மற்றும் அனைத்துக் கட்சி தலைவர்களுக்கும் வாழ்த்துகள். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார். (ஐ)

# முஜிபுர் ரஹ்மான் படம் கொண்ட ரூபாய் நோட்டுகள் நிறுத்தம் நெருக்கடியில் வங்கதேசம்!

ஷேக் முஜிபுர் ரஹ்மான் (முன்னாள் அதிபர்) படம் கொண்ட ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதை வங்கதேச மத்திய வங்கி நிறுத்தியதால், அந்நாட்டில் பண நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அண்டை நாடான வங்கதேசத்தில், அரசுக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டம் தீவிரம் அடைந்தது. போராட்டம் கையை மீறி போனதை அடுத்து, அவாமி லீக் கட்சி தலைவர் ஷேக் ஹசீனா, பிரதமர் பதவியை ராஜினாமா செய்து நம் நாட்டில் தஞ்சம் புகுந்தார். முகமது யூனுஸ் தலைமையில், வங்கதேசத்தில் இடைக்கால அரசு பதவியேற்றது.

நாட்டில், ஹசீனாவின் எதிர்ப்பாளர்கள் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளதால், பழையனவற்றை மாற்றும் வேலையை தீவிரமாக செய்கின்றனர். அவற்றில் ஒன்றாக, ரூபாய் நோட்டுகள், நாணயங்களில் மாற்றம் செய்யப்படுகிறது.

வங்கதேசத்தின் ரூபாய் நோட்டுகளில், முன்னாள் அதிபரும், ஷேக் ஹசீனாவின் தந்தையுமான மறைந்த ஷேக் முஜிபுர் ரஹ்மானின் படம் இடம் பெற்றுள்ளது. அதை நீக்கி விட்டு புதிய ரூபாய் நோட்டுகளை அச்சிட புதிய அரசு முடிவு செய்துள்ளது.




இதனால் ஏற்கனவே புழக்கத்தில் இருக்கும் பழைய ரூபாய் நோட்டுக்கள் எப்போது வேண்டுமானாலும் செல்லாது என்று அறிவிக்க வாய்ப்புள்ளது. இதை கருத்தில் கொண்டு பழைய ரூபாய் நோட்டுகளை மக்கள் வாங்க மறுக்கின்றனர். இதனால் நாடு முழுவதும் பண நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தால் முஜிபுர் ரஹ்மான் படம் இடம்பெற்ற 15, ஆயிரம் கோடி மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் பயன்படுத்தப்படாமல் உள்ளன. இது குறித்து மத்திய வங்கியின் முன்னாள் நிர்வாக இயக்குநர் ஜியாவுதீன் அகமது கூறியதாவது: புதிய ரூபாய் நோட்டுகள் அச்சிடப்படுகின்றன. இது ரொம்ப கடினமான விஷயம்.

பொதுமக்களின் துன்பத்தைப் போக்க அச்சிடப்பட்ட ரூபாய் நோட்டுகளை சந்தையில் புழக்கத்தில் விட வேண்டும். புதிய ரூபாய் நோட்டுக்கள் புழக்கத்திற்கு வந்த பிறகு, பழைய ரூபாய் நோட்டுகள் படிப்படியாக திரும்பப் பெறப்பட வேண்டும். தேவைக்கு ஏற்ப வங்கதேச வங்கியால் புதிய நோட்டுகளை அச்சிட முடியவில்லை.

இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# ஈரான் துறைமுக வெடி விபத்து பலி 65 ஆக உயர்வு விபத்துக்கான காரணத்தில் மர்மம்!



ஈரான் நாட்டின் தென்பகுதியில் உள்ள துறைமுகத்தில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில், பலி எண்ணிக்கை 65ஆக உயர்ந்துள்ளது.

மேற்காசிய நாடான ஈரானின் தெற்கு பகுதியில் உள்ள பந்தர் அப்பாஸ் நகருக்கு அருகே உள்ளது ராஜேய் துறைமுகம். பாரசீக வளைகுடாவில் உள்ள ஹோர்முஸ் ஜலசந்தியில் உள்ள இந்த துறைமுகம் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும், 8 கோடி டன் அளவுக்கு பொருட்கள் கையாளப்படுகின்றன.

இந்த துறைமுகத்தில் இருந்த கன்டெய்னரில் இருந்து திடீரென மர்மபொருள் வெடித்து சிதறியது. இதனால் அப்பகுதி முழுதும் கரும்புகை ஏற்பட்டது. பல கி.மீ., தொலைவு இதன் அதிர்வு உணரப்பட்டது. இந்த விபத்தில், பலி எண்ணிக்கை 65ஆக உயர்ந்துள்ளது. 750க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்த தீ விபத்து மற்றும் அதை தொடர்ந்த வெடி விபத்துக்கு என்ன காரணம் என்பது, அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எனினும், ஏவுகணைகளுக்கான எரிபொருட்கள் தீப்பிடித்து, விபத்து நடந்திருக்க வேண்டும் என தகவல் வெளியாகி உள்ளது.

விபத்துக்கான காரணத்தை ஈரான் அரசு மூடி மறைத்து வருகிறது. இதனால் விபத்து ஏற்பட்ட காரணத்தில் மர்மம் நீடிக்கிறது. (ஐ)

## பாணாந்துறையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது, மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்களினால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த இருவர் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்தார்.

மேற்கு மாலமுல்ல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே உயிரிழந்ததுடன், காயமடைந்த அதே பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய நபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு ரி - 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை ஹிரண பொலிஸார் முன்னெடுத்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜயதிஸ்ஸ இன்று தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்படி எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வியட்நாமில் தங்கியிருப்பார் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

## கடந்தகால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் செ.சிவசுதன் இன்று ஊடக சந்திப்பை நடத்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து உழைப்பாளர் தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

ஆசிரியர் மற்றும் அத்துறைசார் தரப்பினரது ஊதியம் அதிகரிப்பு, கல்வித்துறையில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது, மக்களின் காணி நிலங்கள் விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த மே தினப் பேரணி மே முதலாம் திகதி முற்பகல் இடம்பெறவுள்ளது.

யாழ். மத்திய பஸ்நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த மே தினப் பேரணி யாழ். நகரின் பிரதான சாலைகளூடாகப் பேரணியாகச் சென்று யாழ். பொது நூலகம் முன்பாக ஒன்றுகூடி பேரணிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணியில் அனைத்து துறைசார் தரப்பினரும் ஆதரவை வழங்கி பேரணியை வலுப்படுத்துவது அவசியமாகும்." - என்றார்.

## காங்கேசன்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயணம் செய்து வந்தனர். கடந்த 10ஆம் திகதி நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்ட பலாலி வீதி வரை இன்று பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

பஸ் சேவை நேர அட்டவணை தொடர்பாக பின்னர் அறியத்தரப்படும் என்று பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் பவானந்தராஜா, இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ஜீவக புரசிங்க மற்றும் போக்குவரத்து சபை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பட்டலந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

25 ஆண்டுகளுக்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை தொடர்பில் அடுத்த கட்ட முன்னெடுப்புகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளதுடன், அதன்படி, குறித்த அறிக்கை இன்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## எங்களைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வடக்கு மாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனம் யாழ். ஊடக அமையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு சம்மேளனத்தினர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு மாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனம் கடந்த 4 ஆண்டுகளாக மே தினத்தை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில், இம்முறை நல்லூர் முன்றலில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி ஆரியகுளம் சந்தி வழியாகச் சென்று, ஸ்ரான்லி வீதி, யாழ். நகர் ஊடாக யாழ். மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்து, வை.எம்.சி.ஏ மண்டபத்தில் பேரணிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

நாம் இம்முறை 12 தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புடன் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளோம்." - என்றனர்.

# இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கு ஆயுள் தண்டனை!

*கொழும்பு,ஏப்.29*

*போதைப்பொருள் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட 37 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கு ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று (29) உத்தரவிட்டுள்ளது.*

*நீண்ட விசாரணைக்குப் பிறகு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இந்தத் தீர்ப்பை வழங்கினார்.*

*குறித்த நபர் கடந்த 2013 ஏப்ரல் 7ஆம் திகதியன்று கொட்டாஞ்சேனை பகுதியில் 6.95 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டார்.*

*கைது செய்யப்பட்ட பின்னர் பிரதிவாதிக்கு எதிராக, சட்டமா அதிபர் ஹெரோயின் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்தார்.*

*நீண்ட விசாரணைக்குப் பிறகு தீர்ப்பை அறிவித்த மேல் நீதிமன்ற நீதிபதி, பிரதிவாதிக்கு எதிராக அரசுத் தரப்பு முன்வைத்த குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, பிரதிவாதிக்கு ஆயுள் தண்டனை விதித்து உத்தரவிட்டார்.*

# இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 29

வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் பண்டாரகமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - ஹெய்யன்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய இராணுவச் சிப்பாயே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பண்டாரகமை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் களுத்துறை பண்டாரகமை கிதெல்பிட்டிய பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 6 ஆயிரத்து 230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவரை ஏழு நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணைகளில், சந்தேகநபரான இராணுவச் சிப்பாய் சபுகஸ்கந்த, மீகஹவத்தை, களனி மற்றும் பண்டாரகமை உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் பல்வேறு பிரதேசங்களில் கொள்ளையிட்டார் எனக் கூறப்படும் தங்க நகைகளும் இரத்மலானை மற்றும் கடுவலை ஆகிய பிரதேசங்களில் உள்ள நகை அடகு கடைகளில் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் பிரதித் தலைவர் கைது!



கொழும்பு, ஏப். 29

இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் பிரதித் தலைவரான எல்.ஏ. விமலரத்ன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்துக்குச் சொந்தமானது எனக் கூறப் படும் கதிர்காமம் வீடு தொடர் பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்த விடயம் தொடர்பில் கதிர்காமம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அசோக்க விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ, ருஹுணு கதிர்காமம் மகா தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர உள்ளிட்டோரிடம் வாக்குமூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மின்னல் அனர்த்தம் காரணமாக யாழ்ப்பாணத்தில் 19 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு தினங்களாக ஏற்பட்ட மின்னல் அனர்த்தம் காரணமாக 6 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகளும் சேதமடைந்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/208 கிராம சேவகர் பிரிவில் இரு குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/279 கிராம சேவகர் பிரிவில் 1 குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/301 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களை சேர்ந்த 3 பேரும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/426 கிராம சேவகர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் என 19 பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

# யாழில் வீடொன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் மற்றும் கஞ்சாவுடன் மூவர் சிக்கினார்கள்

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ்ப்பாணத்தில் நான்கு வாள்கள் மற்றும் கஞ்சா போதைப்பொருள்களுடன் மூவர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாதகல் பகுதியில் போதைப்பொருள் வியாபாரக் கும்பல் ஒன்று, கூரிய ஆயுதங்களுடன் வீடொன்றில் இருப்பதாகக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், அந்த வீட்டை இளவாலைப் பொலிஸார் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

அதன்போது, மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நான்கு வாள்கள் மீட்கப்பட்டன. தொடர் தேடுதலின்போது, பிறிதொரு இடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ 600 கிராம் கஞ்சா போதைப்பொருளும் மீட்கப்பட்டன.

அதனையடுத்து வீட்டில் இருந்த மூன்று இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்து இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.04.2025 ல் வெளியிடப்பெற்றது.